


# 5.7 அன்பின் நற்செயல்கள்

**வேத வசனம்:** **ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.**
*எபேசியர் 2:10*

**அறிக்கை:** **நீ தன்னலத்துடனும் தளர்ந்தும் இராமல் தேவனுடைய நம்பிக்கைக்குரிய வேலைக்காரனாய் இரு.**



**சத்தியம்:** தேவன் தம்மை நேசிப்பவர்களுக்கு மிகப்பெரியத் திட்டத்தை வைத்திருக்கிறார். ஆதலால் நாம் தேவனையும் அவருடைய அதிசயமான சித்தத்தையும் நேசித்து அவருக்கு நல்ல விசுவாசமான ஊழியக்காரர்களாக வேண்டும்.

## வேத பகுதி: ஆதியாகமம் 45:1-15

**பாடம்** **1. சுயத்துடனும் சோம்பலுடனும் இராதே:** இந்த சம்பவம் தேவனுடைய நம்பிக்கையையும், அவருடைய பிள்ளைகளிடம் காணப்படவேண்டியவைகளைக் குறித்ததாகும். இதில் குறிப்பிட்டிருக்கிற எஜமான் என்பவர் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஆகும். ஒரு தாலந்தைப் பெற்றவன் எஜமானின் கட்டளையை மீறி அதை மண்ணில் புதைத்துவைத்தான். அவன் பொறுப்பற்ற சோம்பேறித்தனமான மனிதரைக் குறிக்கிறான். அவர்களிடம் எஜமான் “பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே. அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது, அப்பொழுது, நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்ளுவேனே” என்று சொல்லுவார். தொடர்ந்து எஜமான் இந்த வேலைக்காரனை வெளியே இருளுக்குள் தள்ளிவிடுவார். இதிலிருந்து நாம் சோம்பேறிகளாகவும் சுயநலமற்றவர்களாகவும் இருக்கக்கூடாது என்பதைக் கற்றுக்கொள்ளுகிறோம். (மத்தேயு 25:26-30)

**2. விசுவாசமும் விடாமுயற்சியும் கொண்டிரு:** மற்ற இரண்டு வேலைக்காரரும் எஜமானுடைய வேலையை கவனமாகவும் அன்புடனும் செய்தார்கள். தேவன் அவர்களை நல்லவர்கள் என்றும் உண்மையுள்ளவர்கள் என்று பாராட்டினார். அவர்கள் கொஞ்சத்தில் உண்மையாயிருந்ததால் அவர்களை அநேகத்தின்மேல் அதிகாரிகளாக்கினார். ஆண்டவர் இயேசு உலகில் வாழ்ந்தபோது அனைவருக்கும் உதவிகள் செய்தார். சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்ட நடக்க இயலாதவர்களுக்கும், பாலியல் தொழிலாளிகளுக்கும் கூட நன்மைகள் செய்தார். (மத்தேயு 25:21,23)

**3. மற்றவர்களுடன் ஒப்பிடாதே:** அந்த இருவரும் ஒரு தாலந்தைப் பெற்றவனைப்போலல்லாது வித்தியாசமாக வேலைச் செய்ததால் எஜமானின் நற்சான்றிதழையும் பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டனர். இதிலிருந்து தேவன் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான தாலந்துகளைத் தந்து வெவ்வேறு விதமான பொறுப்புகளை நிறைவேற்றும் படி எதிர்பார்க்கிறார். ஆகையால் ஒருவருக்கொருவர் போட்டிபோடவேண்டிய அவசியம் இல்லை. போட்டிபோடுவது தேவனுடைய சித்தத்திற்கு எதிரானது. ஒவ்வொருவரும் அவரவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளைத் திறம்பட செய்து முடிக்க வேண்டும்.

**4. தேவன் நம்முடைய எல்லாக் கிரியைகளையும் நியாயம் தீர்ப்பார்:** ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகையில் நம்முடைய செயல்களை நியாயந்தீர்ப்பார் என்பது வேதபுத்தகம் கூறும் சத்தியம். “கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.” “பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும்... எவன் நன்மைசெய்கிறானோ அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும்.” இதை நாம் நம் வீட்டிலிருந்து துவங்குவோம். நம்முடைய பெற்றோரை நேசித்து, கனப்படுத்தி அவர்களை மகிழ்வைக்கொடுக்கவேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். (யாக்கோபு 2:17, ரோமர் 2:9-10)

**முடிவுரை:** ஆண்டவர் இயேசு பட்டணங்கள்தோறும் சுற்றித்திரிந்து நன்மைகள் செய்து, வியாதியஸ்தருக்கு சுகம் தந்து, ஆவிகளால் அலைக்களிக்கப்பட்டோரை சுகமாக்கினார். தேவன் உண்மையாக பணிசெய்த தமது பிள்ளைகளைப்பார்த்து நல்லது, “உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி” (மத். 25:21) என்று சொல்லுவார். ஆகையால் அன்புடன் நற்செயல்களைச் செய்வோம். அதை நம் வீட்டிலிருந்து துவங்குவோம்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.